புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=====================================================================

*சமூகவியல் கோட்பாட்டு நெறியைத் தமிழியல் வெளியில் நிறுவிய ஈழத்து ஆய்வியக்கம்*

*முனைவர் கி. பார்த்திபராஜா*
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*

=====================================================================

*முன்னுரை*

*சமூகம் அல்லது சமுதாயம் என்பது சில அரசியல்,பண்பாட்டு விதிகளின் அடிப்படையில் திரண்டிருக்கும் மக்கள் திரளைக் குறிக்கும் சொல் ஆகும். அது குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் திரட்சியைக் குறிக்கக்கூடியது. எந்தப் பொருண்மையை உள்ளடக்கிச் சொல்லப்படுகிறதோ, அதைக் குறித்ததாகச் சமூகம் என்ற சொற்பதம் தொழிற்படுகிறது. எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்ட சமயத்தைப் பின்பற்றும் மக்களைச் சமூகம் அல்லது சமுதாயம் என்ற சொல் குறித்து நிற்கிறது. இஸ்லாமிய சமூகம், கிறித்தவ சமுதாயம் எனச் சொல்லப்படுவதை நோக்கலாம். இந்தியச் சமூக அமைப்பில் சாதியக் குழுவைக் குறிப்பதற்கும் சமூகம் அல்லது சமுதாயம் என்ற சொல் பாவிக்கப்படுகிறது. முக்குலத்தோர் சமுதாயம், நாடார் சமுதாயம் எனச் சொல்லப்படுவதையும் காணமுடியும்.*

*குறிச் சொற்கள் :சமுதாயம் – சமுதாய அமைப்பு – மார்க்சியம் – படைப்புத் திறன் – கைலாசபதி – கா.சிவத்தம்பி – தத்துவம் – திறனாய்வு – ஒப்பியல் – படைப்பாளி – நுகர்வோர்.*

*சமுதாயத்தையும் (Society) சமுதாய அமைப்பையும் (Social Structure) உள்ளவாறே கொண்டு அதன் இயக்கப்பாட்டைக் கூறுகளாய் விவரிப்பது சமூகவியல் எனப்படும். சமூகத்தை அதன் கட்டமைப்பு மற்றும் இயங்கியல் விதிகளைக் கொண்டு வரையறுத்தவர்கள் சமூகவியல் அறிஞர்கள். அவர்களின் வரையறைகள், குறிப்பிட்ட சமூகத்தை உள்ளும் புறமுமாய்ப் புரிந்துகொள்ள வழிசமைத்துத் தந்தன.*

*உண்மையில் மார்க்சியம் என்னும் சமுதாய அறிவியல் கோட்பாடே, சமூகவியலுக்கு அறிவியல் பூர்வமான பின்னணியைக் கற்பித்து நிலை நிறுத்தியது. சமூகவியல் மார்க்சியக் கோட்பாட்டினால் உள்வாங்கப்பட்டு சமூகத்தை விளக்கப்படுத்தியபோது, அதுவரை மனித சமூகம் பெற்றிராத புதிய புதிய வெளிச்சங்கள் உருவாகின. சமுதாயத்தை அதன் உண்மை வடிவத்தை, சிக்கற்பாடுகளை, அழகையும் அவலத்தையும் இணைவுகளையும் முரண்களையும் சமூகவியலின் துணைகொண்டு மார்க்சியக் கோட்பாடு வெளிக்காட்டியது.*

*சமூகவியல் என்னும் கோட்பாட்டு நெறி, இருபதாம் நூற்றாண்டின் தொடக்ககாலத் தமிழ் ஆய்வில் கால்பதிக்கத் தொடங்கியபோது அதுவரை மேற்கொள்ளப்பட்டுவந்த ஆய்வுகள் வரலாறு, தொல்லியல், சமூகவியல் ஊடாட்டங்களின் காரணமாகத் 'தமிழியல் ஆய்வாக' விரிவாக்கம் பெற்றது. தமிழ்நாட்டில் எஸ்.வையாபுரிப்பிள்ளை போன்ற முன்னோடிகள் இந்நோக்கிலான ஆய்வுகளுக்குக் கால்கோள் இட்டனரெனினும் உண்மையில் சமூகவியல் ஆய்வினை அதன் முழுமையான பரிமாணத்தில் மேலெடுத்துச் சென்று நிறுவியவர்கள் ஈழத்து ஆய்வாளர்களே ஆவர்.*

*குறிப்பாக, பேரா.கணபதிப்பிள்ளை, பேரா.சு.வித்தியானந்தன், பேரா.க.கைலாசபதி, பேரா.கா.சிவத்தம்பி ஆகிய ஈழத்து ஆய்வாளர்கள், சமூகவியல் கோட்பாட்டு ஆய்வை ஆழப்படுத்தினார்கள்; அகற்சிப்படுத்தினார்கள். அவர்கள் பயணப்பட்ட பாதை, பின் வந்த*

ஆராய்ச்சியாளர்களால் மேலும் மேலும் செழுமைப்படுத்தப்பட்டதோடு விரிவாக்கமும் செய்யப்பெற்றது.

பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன், கைலாசபதி, சிவத்தம்பி எனும் ஆய்வறிஞர்கள் நால்வரின் எழுத்துக்களைக் கொண்டு சமூகவியல் கோட்பாட்டுத் தளத்தை விவாதிப்பது விரிந்து செல்லும் தன்மைத்தது. எனவே சமூகவியல் ஆய்வைத் தன் முன்னோடிகளைத் தொடர்ந்து நிறுவிய கைலாசபதி அவர்களின் செயற்பாட்டுத் தளத்தைச் சுட்டிக்காட்டுவதே போதுமானதாக இருக்கும்.

இலக்கிய ஆய்வுகள்

இலக்கியம் என்பது சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்படுவது. அதாவது இலக்கிய உற்பத்திக்கான கச்சாப்பொருளாகச் சமுதாயமே இருக்கிறது.

''எந்த ஒரு படைப்பாளனிடமும் அவன் வாழும் சமுதாயம் பற்றிய அவனுடைய சிந்தனையைக் காணலாம். சமூகத்தில் காணப்படும் குறைநிறைகள், வாழ்க்கைப் போக்குகள் என்ற பலவற்றையும் கண்டு அவற்றைத் தன் அனுபவங்களுடன் குழைத்துக் கலைவடிவினுள் அமைத்துத் தருவது எழுத்தாளன் பணியாகும். எழுதுகின்றவனின் தனித்தன்மையும் (individuality) ஆளுமையும் (Personality) கலந்தே படைப்பில் அவனது சமுதாய நோக்காக வெளிப்படும்'' (சு.வேங்கடராமன்;1977;41) என்பர்.

கலை, இலக்கியப் படைப்பாளியின் சமூகவியல் நோக்கு, படைப்பில் வெளிப்படுகிறது என்பது ஒருபுறமிருக்க, படைப்பாளியின் சமகாலச் சமுதாயத்தின் தாக்கம் பாலுள் கலந்திருக்கும் வெண்ணைபோலப் படைப்பினுள் உறைந்திருக்கிறது என்பதும் கருத்தில் கொள்ளத்தக்க உண்மையாகும். எந்த ஒரு இலக்கியப் படைப்பும் அது விவரிக்கும் சமுதாய வெளியைத் தாண்டி, படைப்பாளியின் சமகாலச் சமூகத்தின் இருப்பை, முரணை, அசைவியக்கத்தை வெளிப்படுத்தும் என்பது வரலாற்றுண்மையாகும். கம்பனின் 'இராமவதாரம்' வடபுலத்துக் கதையெனினும் வரலாற்றின் காலவெளியின் முந்தைய பகுதியாயினும், கம்பன் என்னும் இலக்கியப் படைப்பாளியின் சமகாலச் சமூகமாகிய, 'பிற்காலச் சோழர் கால'ச் சமூகக் கட்டமைப்பை அது அரூபமாக வெளிப்படுத்திவிடுகிறது.

ஒருவகையில் இலக்கியங்கள் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள் என்று கொள்ளலாம். கண்ணாடி என்கிறபோது அது சமூகத்தை அப்படியே பிரதிபலிக்கும் என்று கருதிக்கொள்ளக்கூடாது. அது ஒரு இலக்கியப் படைப்பாளியின் மொழியைச் சுமந்துகொண்டு, படைப்புத் திறனைச் சுமந்துகொண்டு, அவனுடைய கோணத்தில் வெளிப்படுத்தப்படுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். எனவே இலக்கியத்தில் பிரதிபலிக்கப்படும் சமுதாயம், உண்மையில் 'அப்படியே' இருக்கும் சமுதாயம் அல்ல.

இலக்கியம் வெளிப்படுத்தும் சமூகத்தைப் பல்வேறு ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டத் தலைப்பட்டனர். சி.கனகசபைப்பிள்ளையின் '1800 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழகம்' உள்ளிட்ட நூல்கள் இவ்வாறான செயற்பாட்டின் வெளிப்பாடேயாகும். இலக்கியங்கள் பதிப்பிக்கப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலுமாக இலக்கிய ஆய்வுகளில் இயங்கியவர்கள் 'கண்டு சொல்லும்' பணியைச் சிறப்புறச் செய்தார்கள். அந்தப் பணியின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. ஆனால் அது மட்டுமே போதுமானதல்ல. அவர்கள் சமுதாயத்தை விளக்கப்படுத்தினார்கள்.

இந்த இடத்தில் தத்துவவாதிகளைக் குறித்து மாமேதை மார்க்ஸ் கூறியதை நினைவுபடுத்திக்கொள்ளலாம்:

''தத்துவஞானிகள் உலகைப் பல வழிகளில் வியாக்கியானம் செய்து வந்துள்ளார்கள்; எனினும், அதை எப்படி மாற்றுவது என்பதுதான் எமது பிரச்சினை'' (லுத்விக் ஃபாயர்பாக்கும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவ ஞானத்தின் முடிவும்; பிரெடரிக் ஏங்கெல்ஸ் (தமிழாக்கம் : மு.சிவலிங்கம்) என்றார் மார்க்ஸ்.

சமூகத்தைக் குறித்த வியாக்கியானத்தைச் செய்தவர்களும்கூட இலக்கியத்தில் பதிவு பெற்ற செய்திகளைத் தொகுத்து ஒரு சமூகவியல் வடிவம் கொடுப்பதற்கான முயற்சியை மேற்கோண்டார்கள். அந்தப் பணி போதுமானதா என்பதே நம்முன் எழும் வினாவாகும். சமூகவியல் எவ்வாறு இயங்க வேண்டும்? எவ்வாறு மார்க்சியம் அதனை இயங்க வைத்தது என்பது குறித்துக் கைலாசபதி இப்படிச் சொல்கிறார்:

*“சமூகவியல் சமூக விஞ்ஞானங்களில் ஒன்றாகப் பரிணமித்த காலமுதல் அதிகம் அதிகமாக ஏனைய துறைகளைப் பாதித்து வந்துள்ளது என்பதும் மனங்கொளத் தக்கதே. இதனைச் சிறிது விரித்துரைத்தல் வேண்டப்படுவதாகும். திரட்டிக் கூறுவதாயின், விஞ்ஞானம் பூர்வமாகவும், புறநிலையாகவும் மனிதனையும் சமுதாயத்தையும் ஆய்வதே சமூகவியலின் சாராமிசமாகும். அதற்கு ஏதுவாக சமூக நிறுவனங்களும், நடைமுறைகளும், நம்பிக்கைகளும், வழக்காறுகளும் ஆராயப்படுகின்றன. சமூக நிறுவனங்கள் சமயம், பொருளாதாரம், அரசியல், குடும்பம் முதலியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையவை. இவை யாவற்றினுடைய இயக்கத்தையும் இயக்காற்றலையும் ஆராய்வதே சமூகவியலின் தலையாய பண்பும் பணியுமாகும்” (க.கைலாசபதி;1979;20,21)*
*கைலாசபதி சுட்டிக்காட்டியதைப் போல மார்க்சிய ஆய்வு முறையியில் சமூகவியலின் புதிய பரிமாணத்தைத் தன்னுள் உட்செரித்துக் கொண்டு புதிய நோக்கினை முன்வைத்தது.*
*தமிழியல் ஆய்வில் மார்க்சிய நோக்கு முன்வைத்தவை எவை என்ற வினாவுக்கு மேற்குறித்த மேற்கோளே மிகச்சிறந்த விடையாகும்.*

*கைலாசபதியும் சமூகவியலும்*

*பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன் ஆகியோர் சமூகவியல் அடிப்படையில் தமிழ் இலக்கியங்களைக் காண முற்பட்டவர்கள் ஆவர். அந்த வழித்தடத்தைப் பின்பற்றிக் களத்தில் இறங்கிய கைலாசபதி, சமூகவியலை மார்க்சிய அடிப்படையில் காணத் தொடங்கினார். அந்நோக்கு அவருக்கு வழங்கிய வெளிச்சத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:*
*”திறனாய்வுத் துறையில் முக்கிய கவனஞ் செலுத்தத் தொடங்கிய காலமுதல் கலை இலக்கியம் முதலியவற்றை அவற்றுக்குரிய வரலாற்றுப் பின்னணியிலும் சமுதாயச் சூழலிலும் வைத்தே ஆராய்ந்து வந்திருக்கிறேன். மார்க்சீயத்தைத் தழுவிக் கொண்ட நாள்முதலாக அதன் முனைப்பான கூறுகளில் ஒன்றாகிய சமூகவியலை எனது பல்வேறு ஆய்வுகளுக்குப் பற்றுக்கோடாகக் கொண்டு வந்துள்ளேன். சமூகவியலில் உண்டாகிய ஈடுபாடே ஒப்பியல் ஆய்விற்கு என்னை இட்டுச் சென்றது. இவற்றின் பயனாக இலக்கியத்தை அறிவியல் அடிப்படையில் அணுகக் கற்றுக் கொண்டேன்” (க.கைலாசபதி;1979;v) என்கிறார்.*

*சமூகவியல் நோக்கின் உடைப்பு*

*இலக்கியத்தைப் படைப்பாளிகளை முன்வைத்து – இன்னும் சொல்லப்போனால் – இலக்கியப் படைப்பாளியின் கண்கொண்ட நோக்கை முன்வைத்தே தமிழிலக்கிய ஆய்வாளர்கள் ஆய்வுகளில் ஈடுபட்டு வந்தனர். சமூகவியல் நோக்கு முதன்மையாக ஒரு கேள்வியை எழுப்பியது : படைக்கப்பட்ட இவ்விலக்கியங்களை நுகர்ந்தவர்கள் யாவர்? எந்த முறையில் இப்படைப்புகள் அவர்கள் முன் கொண்டு செல்லப்பட்டன? என்பதாகும்.*
*இந்த வினாக்களை முன்வைத்து, படைப்பு அரங்கேற்றப்பட்ட இடம், சூழல், பின்னணி ஆகியவற்றையும் அதன் வெளிப்பாடாகிய சங்கம் என்ற கருத்துருவத்தின் செயற்பாட்டையும் மிகச் சிறப்பாக விவாதித்திருக்கிறார் ஏ.வி.சுப்பிரமணியன் (தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி;1959).*
*சமூகவியல் கோட்பாட்டு நோக்கிலான ஆய்வே, சங்கக் கவிதைகளை நுகர்வோர் யாவர் என அக்கறைப்பட்டது.*
*“தமிழிலக்கிய ஆய்வாளர்கள் இதுகாலவரை இலக்கியக் கர்த்தாக்களை மையமாகக் கொண்டு நூல்களின் பொருள், வடிவம், சிறப்பியல்பு இவற்றைச் சிலாகித்துப்பேசி வந்துள்ளனரே அன்றி, ஒவ்வொரு நூலும் தோன்றிய காலப்பகுதியில் அதற்கு இருந்திருக்கக்கூடிய Audience – கேட்குநர், வாசகர், சுவைஞர் – ஆகியோரது ஏற்புடைமை நிலையினின்று நூலின் பண்புகளை விமர்சனஞ் செய்யவில்லை. பரணருக்கும், கம்பருக்கும், பாரதிக்கும், பட்டுக்கோட்டை கலியாண சுந்தரத்துக்கும் உள்ள சுவைஞரும் வாசகரும் வேறுபட்ட அறிவு நிலையிலும், உணர்வு வளத்திலும் இருப்பவர்கள். வெவ்வேறு காலத்து வாசகர்கள் வெவ்வேறு விஷயங்களையும், விழுமியங்களையும் இலக்கியத்திலிருந்து எதிர்பார்க்கின்றனர்” (க.கைலாசபதி;1979;22,23) என்று விளக்கப்படுத்துகிறார் கைலாசபதி.*
*சமூகவியல் கோட்பாட்டு நோக்கு, இலக்கிய ஆய்வில் இதுவரை எழுப்பப்படாத பல வினாக்களை எழுப்பி விடைகாண முயற்சித்தது. அத்தகைய வினாக்களை எழுப்புகிறவர்களாக ஈழத்து ஆய்வாளர்கள் அமைந்தனர்.*

*சமூகவியல் அணுகுமுறை*

*சமூகவியல் கோட்பாடு இலக்கியங்களை உரியவாறு இனங்காண்பதற்கும் மதிப்பிடுவதற்கும் அவசியமானது என்கிறார் ந.சுப்பிரமணியன். "சமூக விஞ்ஞானத் துறைகள் பலவற்றுள்ளும் இலக்கியத்துடனும் மிக நெருக்கமான தொடர்புடையதாகத் திகழ்வது சமூகவியல்.தனிமனிதருடைய நடத்தை, அவர் சமூகத்துடன் கொள்ளும் உறவுநிலை என்பன பற்றி ஆராய்வதன் மூலம் அது கலை, இலக்கியம் என்பவற்றுடன் நெருங்கிய தொடர்பு பெறுகிறது. கலையும் இலக்கியமும் சமூகமாந்தரின் அநுபவங்களில் ஊற்றெடுப்பவை. அவற்றின் ஊற்றுக்கண் களை உரியவாறு இனங்காண்பதற்கும் மதிப்பிடுவதற்கும் சமூகவியல் சார் அணுகுமுறை அவசியமாகிறது" (ந.சுப்பிரமணியன்; 1999 ;23) என்பார் அவர்.*

*சமூகவியல் கோட்பாட்டு அணுமுறையினை அதன் வேரோடும் வேரடி மண்ணோடும் உள்வாங்கிக் கொண்டவர்களாக ஈழத்து ஆய்வாளர்களைச் சொல்ல வேண்டும். இலக்கியம் என்பது தெய்வாம்சப் படைப்பு அல்ல; அது தனி மனித மூளையின் விளைச்சல் அல்ல; மாறாக, அது சமூகத்தின் விளைபொருள் என்பதை அழுத்தம் திருத்தமாக உரைக்கிறது சமூகவியல் கோட்பாடு. சமூகவியல் அணுகுமுறையின் பிரதான அம்சங்களைப் பின்வருமாறு எடுத்துக்காட்டுகிறார் கைலாசபதி:*

*"இலக்கியத்தை அடிப்படையில் சமூக விளை பொருளாகக் கொண்டு, அதனை உரிய வரலாற்றுச் சூழலில் வைத்து நோக்கி, அதன் உயிராற்றல் காலத்துக்குக் கட்டுப்பட்டும் காலத்தை வென்றும் நின்றகும் தன்மையை விளக்குவதே சமூகவியல் அணுகுமுறையின் பிரதான அம்சங்களாகும்" (க.கைலாசபதி;1983;21) என்று விளக்குவார் அவர்.*

*வளப்படுத்தப்பட்ட இரு துறைகள்*

*பேராசிரியர் கைலாசபதிக்கு முன்னோடிகளாக வையாபுரிப்பிள்ளையிலிருந்து சு.வித்தியானந்தன் வரை பலர் அமைகின்றனர். ஆனால் தான் ஈடுபட்ட துறைகளின் முன்னோடிகள் வகுத்த பாதையை அகட்டுவித்த பெருமை கைலாசபதியைச் சாருகிறது. ஒப்பியல், சமூகவியல் என்னும் இரு துறைகளில் கைலாசபதியின் செயற்பாட்டு விளச்சலை சு.வித்தியானந்தன் விதந்தோதுகிறார்.*

*"பேராசிரியர் கைலாசபதியின் இடைவிடாத முயற்சியாலே தமிழராய்ச்சித் துறையிலே வளம்படுத்தப்பட்ட துறைகளை இருவகைப்படுத்தலாம். ஒன்று, ஒப்பியல் நோக்கு. மற்றது, சமூகவியற் பார்வை. தமிழ் மொழியினதும் இலக்கியத்தினதும் வரலாற்று வளர்ச்சியை ஆராய்வதற்குத் தமிழ்மொழியோடு தொடர்புடைய பிற மொழிகளினதும் தமிழ் போலப் பாரம்பரியமுள்ள அந்நிய மொழிகளினதும் வளர்ச்சி வரலாற்றை அறிந்து தொடர்புபடுத்தி நோக்குவது அவசியமாய் இருந்தது, இது ஒப்பியல் நோக்கின் பாற்படும். மொழி இலக்கியம் என்பவற்றுக்கும் அவற்றுக்குக் களமாகவுள்ள சமூகத்திற்குமுள்ள உறவை விளங்கிக் கொள்வதோடு அவற்றின் சமுதாயப் பயன்பாட்டு அம்சங்களைக் கண்டு கொள்வதும் சமூகவியற்படும். இவ்விருவகைப் பார்வைகளின் பெறுபேறுகளாகவே கைலாசபதியவர்களது ஆராய்ச்சி வெளியீடுகள் அமைந்துள்ளன" ( டொமினிக் ஜீவா (தொகு.);1996;11)*

*சமூகவியல் பார்வையின் விளைச்சல்*

*தமிழ் இலக்கியங்களையும் அவற்றுக்குத் தளங்களாக அமையக்கூடிய சமுதாய வரலாற்றுச் சூழல்களையும் காலகட்டங்களாக வகைப்படுத்துவதில் கைலாசபதி, தமது காலத்துக்கு முற்பட்ட மற்றும் சமகால ஆய்வாளர் பலரிலிருந்து வேறுபட்டாரெனக் கருதுகிறார் ந.சுப்பிரமணியன். பொதுவாக இலக்கிய கர்த்தாக்களையும் இலக்கிய வகைகளையும் மையப்படுத்தியும், நூற்றாண்டுகளின் அடிப்படையிலும், ஆதிக்கம் பெற்றிருந்த அரசமரபு மற்றும் பண்பாட்டுக் கருத்தியல்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டும் காலகட்டங்களை வகுப்பதே கைலாசபதி காலம் வரை நிலவி வந்துள்ள அணுகுமுறைகள் என்கிறார் அவர்.*

*"சங்க காலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், இருபதாம் நூற்றாண்டு என்பனவாக வி.செல்வநாயகம் மேற்கொண்ட இலக்கிய வரலாற்றுக் காலப் பகுப்பே கைலாசபதி காலத்தில் ஆய்வாளர் பலராலும் பொதுவாக ஏற்கப்பட்டிருந்தது. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த தமிழறிஞருள் ஒருவரான கே.என்.சிவராஜபிள்ளை தமிழிலக்கியப் பரப்பை இயற்கை நெறிக் காலம், அறநெறிக்காலம்,*

*சமயநெறிக் காலம், எனப் பண்பாட்டுக் கருத்தியல்களினடிப்படையில் வகைப்படுத்தலாம் என்ற எண்ணத்தை முன் வைத்திருந்தார். இதனை, கைலாசபதியின் சமகாலத்தவரும் உடன் பணியாற்றியவருமான ஆ.வேலுப்பிள்ளை தமது தமிழ் இலக்கியத்திற் காலமும் கருத்தும் என் நூலில் செயற்படுத்தினார். இவ்வாறான சூழலில் கைலாசபதி மேற்படி பார்வைகளிலிருந்து வேறுபட்டு, தாம் சார்ந்திருந்த மார்க்சியப் பார்வையினடிப்படையில் புதிய பகுப்பு முறையை மேற்கொண்டார். தொன்மையான இனக்குழு, பழம் பொதுமைச் சமூகம், அடிமைச் சமூகம், நிலவுடைமைச் சமூகம், முதலாளியச் சமூகம் என்பனவாகத் தமிழர் சமூக வரலாற்றுக் கட்டங்களை நோக்கும் முறைமையை அவரது ஆய்வுகளில் கண்டுணரலாம்" (ந.சுப்பிரமணியன்; 1999; 26)*

*கைலாசபதியின் நோக்கு முறைமையில் புதிய சாளரங்களைத் திறந்துவிட்டது சமூகவியல் அணுகுமுறையே என்பதை உறுதிபடச் சொல்லலாம்.*

*முடிவுரை*

*தமிழியல் ஆய்வு வெளியில் பல்வேறு கோட்பாடுகள் உட்புகுத்தப்பட்டு ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சில கோட்பாடுகள் வந்த வேகத்திலேயே தாக்குப்பிடிக்க முடியாமல் காணாமலும் போயிருக்கின்றன. ஆனால் சமூகவியல் கோட்பாட்டு அணுகுமுறையைத் தமிழக ஆய்வாளர்கள் தொடங்கி வைத்தனரெனினும், சமூகவியல் கோட்பாட்டு நெறியைத் தமிழியல் வெளியில் நிறுவியது ஈழத்து ஆய்வாளர்களேயாவர். அவர்களிலும் பேராசிரியர் க.கைலாசபதியவர்களுடைய இடம் தனித்துவமானதாகும். பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன் ஆகியோரைத் தொடர்ந்து சமூகவியல் அணுகுமுறையில் புதிய பாய்ச்சல்களை நிகழ்த்தி ஆய்வுலகில் தனித்துவம் பெற்றார் பேராசிரியர் கைலாசபதி. பேராசிரியர் கா.சிவத்தம்பி இந்த அணுகுமுறையை இன்னும் வளப்படுத்தி, கனப்படுத்தினாரெனலாம்.*

*எனவே சமூகவியல் கோட்பாட்டு நெறியைத் தமிழியல் வெளியில் நிறுவிய ஈழத்து ஆய்வியக்கங்களாகிய பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்கள் என்றென்றும் நினைவில் நிறுத்தப்பட வேண்டியவர்கள் ஆவர்.*

*கருவி நூல்கள்:*

1. *க.கைலாசபதி; 'சமூகவியலும் இலக்கியமும்'; நியூ செஞ்சுரி பிரைவேட் லிமிடெட், சென்னை;1979.*
2. *க.கைலாசபதி; 'இலக்கியச் சிந்தனைகள்'; விஜயலட்சுமி புத்தகசாலை, கொழும்பு;1983.*
3. *ந.சுப்பிரமணியன்; 'தமிழ் ஆய்வியலில் கலாநிதி கைலாசபதி'; சவுத் விஷன், சென்னை;1999.*
4. *ஏ.வி.சுப்பிரமணிய அய்யர்; 'தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி'; அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், சென்னை;1959.*
5. *டொமினிக் ஜீவா (தொகு.); 'எங்கள் நினைவுகளில் கைலாசபதி'; மல்லிகைப் பந்தல், யாழ்ப்பாணம்;1996.*
6. *வேங்கடராமன்.சு., 'அகிலன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு'; தமிழ்ப் புத்தகாலயம், சென்னை;1977.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********